ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2261/3 - 2022 ජනවාරි මස 03 වැනි සඳුදා - 2022.01.03

*2261/3 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 03 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி IV(அ) - மாகாண சபைகள்

## மாகாண சபை அறிவித்தல்கள்

### மத்திய மாகாண மாகாண சபை

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 உடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 223 இன் கீழான சட்டம்*

*மத்திய மாாண ஆளுநர் லலித் யூ. கமகே ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் பிரிவு 223 இன்படி பின்வரும் உத்தரவை வெளியிடுகிறேன். இது 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 உடன் வாசிக்கப்பட வேண்டும்.*

*சட்டத்தரணி லலித் யூ. கமகே,*
*ஆளுநர்,*
*மத்திய மாகாணம்.*

*ஆளுநரின் அலுவலகம்,*
*தளதா மாளிகை சதுக்கம்,*
*கண்டி,*
*2021, திசெம்பர் 31.*

### சட்டம்

*1. இந்தச் சட்டம் மத்திய மாகாணத்தின் பிரதேச சபைகளில் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான சட்டம் என அழைக்கப்படுகிறது.*

*2. மத்திய மாகாணத்தின் ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் தலைவரினால் 2022 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 168 (2) ஆம் பிரிவின் பிரகாரம் தயாரித்து, பிரதேச சபைச் சட்டத்தின் 168(2) ஆம் பிரிவின் கீழ் இறுதியாகப் பரிசீலனை செய்வதற்காக சபைக்கு முன்வைக்கப்பட்டு, அது நிறைவேறாததன்*

காரணமாக மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 17 ஆவது பிரிவின் பிரகாரம் நடைமுறைப்படுத்தாததன் காரணத்தினால் 2021/12/31 ஆந் திகதி நள்ளிரவில் இருந்து தலைவர் பதவியைக் கைவிடப்பட்டு சென்றதாகக் கருதி அத்தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தும் வகையில் ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் தலைவர் பதவி வெற்றிடமானதாகக் கருதப்படுகிறது.

3. மத்திய மாகாணத்தின் நுவரெலியா மாவட்டத்தின் எல்லைக்குள் அமைந்துள்ள ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் 2022 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் பிரதேச சபைச் சட்டத்தின் 168, 168(2) ஆம் பிரிவுகளின் தேவைகளுக்கு ஏற்ப நிறைவேற்றாத காரணத்தினால் ஹங்குரன்கெத்த பிரதேச சபையின் தலைவரின் பதவி 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 17 ஆவது பிரிவின்படி பதவி வெற்றிடமாவதன் காரணமாக 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல் (திருத்தங்கள்) சட்டத்திற்கு அமைய அவ்வெற்றிடம் நிரப்பும் வரை தலைவரின் பதவி வெற்றிடமான தினத்தில் இருந்து அப்பதவியின் செயல்கள், அதிகாரங்கள், செயல்பாடுகள், செயல்படுத்தல், செயல்படுத்தலுக்காக பிரதேச சபைச் சட்டத்தின் 8(4) ஆம் பிரிவின் பிரகாரம் உப தலைவருக்கு பரிமாற்றப்படும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.

4. மத்திய மாகாணத்தில் ஒரு குறிப்பிட்ட பிரதேச சபைக்கான 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 168 இன்படி நிறைவேற்றப்படாதபோது அல்லது காலதாமதம் ஆகும்போது மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 17 இன்படி குறித்த பிரதேச சபையில் தலைவர் பதவி வெற்றிடமாக இருக்கும் போது அந்த வெற்றிடத்தினை நிரப்ப 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கத் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தின் விதிகளின்படி செயற்படாதபோது அல்லது வெற்றிடத்தினை நிரப்ப நியமிக்கப்பட்ட தலைவர், 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தினை நிறைவேற்றும் பொருட்டு அதனுடன் தொடர்பான எழுத்துபூர்வமான நியதிகளுக்கு ஏற்ப சபைக்குச் சமர்ப்பிப்பதற்கான குறைந்தபட்ச நாட்கள் இல்லை என உணரும் போது, 2022 ஆம் ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட குறித்த வரவு செலவுத் திட்ட ஆவணம், குறித்த பிரதேச சபை அமைந்துள்ள மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் ஒப்புதலுடன் 2022 ஆம் ஆண்டிற்காக குறித்த பிரதேச சபையால் செயல்படுத்தப்படுதல் சட்டபூர்வமானதாகும்.

5. இந்தச் சட்டத்தில் உள்ள அனைத்து விதிகளும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சித் தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தின் விதிகளின்படி நடைமுறைக்கு வரும்.

EOG 01-0002/1

---

**மத்திய மாகாண மாகாண சபை**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 உடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய அதிகாரம் 255 ஆவது நகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 247 ஆவது பிரிவின் கீழான சட்டம்

மத்திய மாகாணத்தின் ஆளுநர் லலித் யு. கமகே ஆகிய நான், 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணை) சட்டத்தின் பிரிவு 2 உடன் இணைந்து வாசிக்க வேண்டிய நகர சபைகளின் கட்டளைச் சட்டம் அதிகாரம் 255 இன் பிரிவு 247 இன்படி பின்வரும் சட்டத்தினை விதிக்கிறேன்.

சட்டத்தரணி லலித் யு. கமகே,
ஆளுநர்,
மத்திய மாகாணம்.

ஆளுநரின் அலுவலகம்,
தளதா மாளிகை சதுக்கம்,
கண்டி,
2021, திசெம்பர் 31.

**சட்டம்**

1. இந்த உத்தரவு மத்திய மாகாணத்தின் நகர சபைகளில் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான கட்டளைச் சட்டம் என அழைக்கப்படுகிறது.

2. மத்திய மாகாணத்தில் ஒரு குறிப்பிட்ட நகர சபைக்கான 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம், 255 ஆவது அதிகாரமான நகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 178 ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி நிறைவேற்றப்படாத போது அல்லது காலதாமதம் ஆகும்போது மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 17 இன்படி குறித்த நகர சபையில் தலைவர் பதவி வெற்றிடமாக இருக்கும்போது அந்த வெற்றிடத்தினை நிரப்ப 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கத் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தின் விதிகளின்படி செயற்படாதபோது அல்லது வெற்றிடத்தினை நிரப்ப நியமிக்கப்பட்ட தலைவர், 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தினை நிறைவேற்றும் பொருட்டு அதனுடன் தொடர்பான எழுத்துபூர்வமான நியதிகளுக்கு ஏற்ப சபைக்குச் சமர்ப்பிப்பதற்கான குறைந்தபட்ச நாட்கள் இல்லை என உணரும் போது, 2022 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட குறித்த வரவு செலவுத் திட்ட ஆவணம், குறித்த நகர சபை அமைந்துள்ள மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் ஒப்புதலுடன் 2022 ஆம் ஆண்டிற்காக குறித்த நகர சபையால் செயல்படுத்தப்படுதல் சட்டபூர்வமானதாகும்.

3. இந்தச் சட்டத்தில் உள்ள அனைத்து விதிகளும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சித் தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தின் விதிகளின்படி நடைமுறைக்கு வரும்.

EOG 01-0002/2

---

**மத்திய மாகாண மாகாண சபை**

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 உடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 223 இன் கீழான சட்டம்

மத்திய மாாண ஆளுநர் லலித் யூ கமகே ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் பிரிவு 223 இன்படி பின்வரும் உத்தரவை வெளியிடுகிறேன். இது 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 உடன் வாசிக்கப்பட வேண்டும்.

சட்டத்தரணி லலித் யூ. கமகே,
ஆளுநர்,
மத்திய மாகாணம்.

ஆளுநரின் அலுவலகம்,
தளதா மாளிகை சதுக்கம்,
கண்டி,
2021, திசெம்பர் 31.

**சட்டம்**

1. இந்தச் சட்டம் மத்திய மாகாணத்தின் பிரதேச சபைகளில் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான சட்டம் என அழைக்கப்படுகிறது.

2. மத்திய மாகாணத்தில் ஒரு குறிப்பிட்ட பிரதேச சபைக்கான 2022 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 168 இன் படி நிறைவேற்றப்படாத போது அல்லது காலதாமதம் ஆகும்போது அல்லது காலம் தாமதம் ஆகும்போது மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் 17 ஆவது பிரிவின்படி குறித்த பிரதேச சபையில் தலைவர் பதவி வெற்றிடமாக இருக்கும் போது அந்த வெற்றிடத்தினை

*நிரப்ப 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கத் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தின் விதிகளின்படி செயற்படாத போது அல்லது வெற்றிடத்தினை நிரப்ப நியமிக்கப்பட்ட தலைவர், 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தினை நிறைவேற்றும் பொருட்டு அதனுடன் தொடர்பான எழுத்துபூர்வமான நியதிகளுக்கு ஏற்ப சபைக்குச் சமர்ப்பிப்பதற்கான குறைந்தபட்ச நாட்கள் இல்லை என உணரும் போது, 2022 ஆம் ஆண்டுக்காக தயாரிக்கப்பட்ட குறித்த வரவு செலவுத் திட்ட ஆவணம், குறித்த பிரதேச சபை அமைந்துள்ள மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் ஒப்புதலுடன் 2022 ஆம் ஆண்டிற்காக குறித்த பிரதேச சபையால் செயல்படுத்தப்படுதல் சட்டபூர்வமானதாகும்.*

3. *இந்தச் சட்டத்தில் உள்ள அனைத்து விதிகளும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சித் தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தின் விதிகளின்படி நடைமுறைக்கு வரும்.*

EOG *01-0002/3*

---

**மத்திய மாகாண மாகாண சபை**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 உடன் இணைத்து வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 223 இன் கீழான சட்டம்*

*மத்திய மாகாணத்தின் ஆளுநர் லலித் யூ. கமகே ஆகிய நான், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தின் பிரிவு 223 இன்படி பின்வரும் உத்தரவை வெளியிடுகிறேன். இது, 1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (துணை ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 2 உடன் வாசிக்கப்பட வேண்டும்.*

*சட்டத்தரணி லலித் யூ. கமகே,*
*ஆளுநர்,*
*மத்திய மாகாணம்.*

*ஆளுநரின் அலுவலகம்,*
*தளதா மாளிகை சதுக்கம்,*
*கண்டி,*
*2021, திசெம்பர் 31.*

**சட்டம்**

1. *இந்தச் சட்டம் மத்திய மாகாணத்தின் பிரதேச சபைகளில் 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தை அமுல்படுத்துவது தொடர்பான சட்டம் என அழைக்கப்படுகிறது.*

2. *மத்திய மாகாணத்தின் கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரலை பிரதேச சபையின் தலைவரினால் 2022 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 168 (2) ஆம் பிரிவு பிரகாரம் தயாரித்து, பிரதேச சபைச் சட்டத்தின் 168(2) ஆம் பிரிவின் கீழ் இறுதியாகப் பரிசீலனை செய்வதற்காக சபைக்கு முன்வைக்கப்பட்டு, அது நிறைவேறாததன் காரணமாக மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 17 ஆவது பிரிவின் பிரகாரம் நடைமுறைப்படுத்தாததன் காரணத்தினால் 2021/12/31 ஆந் திகதி நள்ளிரவில் இருந்து தலைவர் பதவியைக் கைவிடப்பட்டு சென்றதாகக் கருதி அத்தினத்தில் இருந்து நடைமுறைப்படுத்தும் வகையில் கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரலை பிரதேச சபையின் தலைவர் பதவி வெற்றிடமானதாகக் கருதப்படுகிறது.*

3. *மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தின் எல்லைக்குள் அமைந்துள்ள கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரலை பிரதேச சபையின் 2022 ஆம் வருடத்திற்கான வரவு செலவுத் திட்டம் பிரதேச சபைச் சட்டத்தின் 168, 168(2) ஆம் பிரிவுகளின் தேவைகளுக்கு ஏற்ப நிறைவேற்றாத காரணத்தினால் கண்டி கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோரலை பிரதேச சபையின் தலைவரின் பதவி 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 17 ஆவது பிரிவின்படி பதவி வெற்றிடமாவதன் காரணமாக 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்களின் தேர்தல்*

*(திருத்தங்கள்) சட்டத்திற்கு அமைய அவ்வெற்றிடம் நிரப்பும் வரை தலைவரின் பதவி வெற்றிடமான தினத்தில் இருந்து அப்பதவியின் செயல்கள், அதிகாரங்கள், செயல்பாடுகள், செயல்படுத்தல், செயல்படுத்தலுக்காக பிரதேச சபைச் சட்டத்தின் 8(4) ஆம் பிரிவின் பிரகாரம் உப தலைவருக்கு பரிமாறப்படும் என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

4. *மத்திய மாகாணத்தில் ஒரு குறிப்பிட்ட பிரதேச சபைக்கான 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டம், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 168 இன்படி நிறைவேற்றப்படாதபோது அல்லது காலதாமதம் ஆகும்போது மற்றும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டத்தின் பிரிவு 17 இன்படி குறித்த பிரதேச சபையில் தலைவர் பதவி வெற்றிடமாக இருக்கும் போது அந்த வெற்றிடத்தினை நிரப்ப 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்கத் தேர்தல்கள் (திருத்த) சட்டத்தின் விதிகளின்படி செயற்படாதபோது அல்லது வெற்றிடத்தினை நிரப்ப நியமிக்கப்பட்ட தலைவர், 2022 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டத்தினை நிறைவேற்றும் பொருட்டு அதனுடன் தொடர்பான எழுத்துபூர்வமான நியதிகளுக்கு ஏற்ப சபைக்குச் சமர்ப்பிப்பதற்கான குறைந்தபட்ச நாட்கள் இல்லை என உணரும் போது, 2022 ஆம் ஆண்டுக்காகத் தயாரிக்கப்பட்ட குறித்த வரவு செலவுத் திட்ட ஆவணம், குறித்த பிரதேச சபை அமைந்துள்ள மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் ஒப்புதலுடன் 2022 ஆம் ஆண்டிற்காக குறித்த பிரதேச சபையால் செயல்படுத்தப்படுதல் சட்டபூர்வமானதாகும்.*

5. *இந்தச் சட்டத்தில் உள்ள அனைத்து விதிகளும் 2012 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவனங்கள் (சிறப்பு ஏற்பாடுகள்) சட்டம் மற்றும் 2012 ஆம் ஆண்டின் 22 ஆம் இலக்க உள்ளூராட்சித் தேர்தல்கள் (திருத்தம்) சட்டத்தின் விதிகளின்படி நடைமுறைக்கு வரும்.*

EOG *01-0002/4*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.